# கடிவாளம்

KADIVALAM

யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் நான்காம் அணி மாணவர்களின்

கடிவாளம் 6 | வைகாசி - ஆனி | பக்கங்கள் 8


# யாழ். நகரில் வாகனத்தரிப்பிடங்கள் இன்மையால் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)



முன்னரை விட தற்போது யாழ் - நகர்ப்பகுதி சனநெருக்கடி மிகுந்ததாக மாறியுள்ளது. காரணம் தென்னிலங்கைப் பகுதியின்மக்களின் வருகை . அதிக கனரக வாகனங்களின் வருகைக்கு நிகராக யாழ் - நகர வீதிகள் அகலமாக்கப் படவில்லை.

இதனால் போக்கு வரத்தின் போது அதிக நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய நிலையே காணப்படு கின்றது. ஸ்ரான்லி வீதிப் பகுதியில் வீதியோரங்களில் பாரிய வாகனங்கள் நிறுத்தப் பட்டுள்ளமையால் அவ்வீதியில் செல்லும் மக்கள் நெருக்கடிக் குள்ளாகி வருகின்றமையையும் அவதானிக்கலாம். யாழ்.நகரில் வாகனங்களுக்கான தரிப்பிடங்கள் பிரத்தியேகமாக அமைக் கப்படவில்லை. இதனால் வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

வாகனம் நிறுத்தத்தடை என்ற பதாகைகள் தமக்குரிய கடமையைச் சரிவரச் செய் தாலும் நம்மில் பலர் தம் கடமையில் இருந்து தவறித் தடை விதித்த இடத்திலேயே வாகனத்தை நிறுத்திவிட்டுச் செல்கின்றனர். இவ்வாறு அவர்கள் நிறுத்தக் காரணம் தரிப்பிடங்கள் இல்லாத நிலைதான். இதனால் பாரிய விபத்துகளை எதிர் கொள்ள வேண்டியதாக உள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைக்கப் பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தையே வெளிப் பயணிகளும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இட நெருக்கடி நிலை உருவாகி யுள்ளது. மேலும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் களைப் பார்வையிடச் செல்வ தற்கு தற்காலிகமாக அமைக் கப்பட்டுள்ள நுழைவாயிலுக்கு அண்மையில் சைக்கிள் பாதுகாப்புக்கென்ற ஒரு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு ஒரு தரிப்பிடம் இருப்பது என்று மக்களுக்கு தெரியப் படுத்தும் பதாகைகள் எவற்றையும் அங்கு காண முடியவில்லை. இதனால் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்லும் பயணிகள் திரும்பிவரும்.



செய்தி:- துவாரகி, படங்கள்:-ஜெகன்

(6ஆம் பக்கம் பார்க்க)


## பேருந்து தாமதம்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத் துச்சபைப் பேருந்து கால தாமதமாகப் புறப்படுவதால் பயணிகள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அண்மையில் யாழ்.மத்திய பேருந்து நிலையத் திலிருந்து 5மணிக்கு புறப்பட வேண்டிய பேருந்து 6மணிக்குப் புறப்பட்டதால் பயணிகள் உரிய நேரத்தில் தமது இடங்களுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. தனியார் பேருந்துகளில் சன நெரிசல் அதிகமாக உள்ளதால் குறிப்பிட்ட பயணிகள் இ.போ.ச பேருந்துகளை நாடிச்செல்ல வேண்டியுள்ளது.

ஆனால் அப் பேருந்துகளும் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடாததால் பயணிகள் அவதிக் குள்ளாகின்றனர். யாழ்-பருத்தித் துறை சேவையில் ஈடுபடும் இ.போ.ச பேருந்துகள் பெரும் பாலான நாட்களில் தாமதமாகவே புறப் படுவதாக தெரிவித்தனர். இதனால் இ.போ.ச பேருந்துகளை குறித்த நேரத்தில் இயக்க போக்குவர த்துச்சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக அமைக்கப்படும் ஐந்து நட்சத்திரம்

யாழ்.நகருக்கு அண்மையில் பத்து நிமிடத்துக்குள் செல்லக்கூடிய அல்லைப்பிட்டிப் பகுதியில் தற்போது நட்சத்திரவிடுதி அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விடுதி ஐந்து நட்சத்திர விடுதியாக அமைக்கப்படவுள்ளது. இது 54 சதுரப் பரப்பளவுடைய நிலத்தில் 120 அறைகளையும் அழகிய நீர்த் தடாகங்களையும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. அங் கிருந்து நெடுந்தீவு, நயினாதீவு, பாலைதீவு, எழுவைதீவு போன்ற தீவுகளுக்கு செல்ல படகு சேவைகள் தயார்படுததப் படவுள்ளது.




வெளிநாட்டவர்களைக் கவரும் வகையில் விடுதியுடன் இணைந்த அழகிய கடற்கரையும் அருகிலே அல்லைப்பிட்டி மீன்பிடித் துறைமுகமும் அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாது நடுவிலே பனைமரங்கள் இருக்க சுற்றிவர அழகியநீச்சல் தடாகமும் அமைக்கப்படவுள்ளது. இந்த விடுதி கடலுக்கு அருகாமை என்பதால் உடனுக்குடன் மீன்கள், றால், நண்டு, கணவாய் போன்ற வற்றையும் விசேடமாக அதிக மட்டிகளையும் பெற முடியும். யாழ்ப்பாணத்தில் பனைமரங்கள் அனேகமாக இருப்பதால் பனம் பண்டங்கள், ஒடியற்கூழ் போன்றனவும் கிடைக்கும். அதனை சுற்றுலாப் பயனிகளும் விரும்புவார்கள் என விடுதி பணிமனைக்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.



செய்தி,படங்கள் :-தசாங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணின் கலாசாரம் சீரழிகின்றதா?

யாழ்ப்பாண மண்ணின் பெருமை சொல்லில் அடங்காதது. அது போன்றே மண்ணில் வாழும் மக்களின் பெருமையும் கலாசாரமும் சொல்லில் அடங்காததே. ஆனால் இன்றைய ஊடகங்கள் யாழ்ப்பாண கலாசாரம் பற்றிய விமர்சனங்களை வெளியிட்ட வண்ணம் உள்ளது.

சமாதான காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இவ்வாறான செய்திகள் வெளிவருவது மிக மிக குறைவாகவே காணப்பட்ட போதிலும் தற்போது சமாதான சூழல் ஏற்பட்டபின் அதாவது வெளியூர்களில் இருந்து மக்கள் வரத்தொடங்கிய பின்பு இவ்வாறான கலாச்சாரச்சீரழிவுகள் பற்றிய செய்திகளும் வெளிவருகின்றன. யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் சில தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் இனணயங்கள், பத்திரிகைகள் அவற்றை பாரிய அளவில் பெரிதுபடுத்தி யாழ்ப்பாணக்கலாசாரம் சீரழிந்து போகின்றது என தகவல்களை வெளியிட்டு வருகின்றன. **நடக்கும் தவறுகளை எந்தளவிற்கு அப்பட்டமாக சுட்டிக்காட்டுகின்றோமோ அதே அளவு வேகத்துடன் அத்தவறுகள் ஏற்படுவதற்கு தூண்டுதலாக இருக்கும் காரணங்களையும் கண்டறிந்து கொண்டு அவற்றிக்கான தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும்.** அதைவிடுத்து கலாசாரம் சீரழிகிறது, யாழ்ப்பாணக் கலாசாரம் அழிவுப்பாதைக்கு செல்கின்றது எனக்கூறிக கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை.

ஊடகங்கள் சுட்டிக்காட்டும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமா நடைபெறுகின்றன என நோக்கினால் இவ்வாறான சம்பவங்கள் இலங்கையின் தென்பகுதியிலும் ,கொழும்பு சார்ந்த பகுதியிலும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு அங்கு இடம்பெறும் சம்பவங்களோடு ஒப்பிடுமிடத்து யாழ்ப்பாணத்தில் இத்தகைய சம்பவங்கள் மிக மிக குறைந்தளவாகவே இடம் பெறுகின்றன. இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதற்கு தூண்டுதலாக அமைந்தவை வெளியிடத்து வருகைகள் தான். அதை சுட்டிக்காட்டாமல் யாழ்ப்பாண இளைஞர் யுவதிகளை மட்டும் சாடுவது நியாயமற்றது. யாழ்ப்பாணத்தில் இவ் வாறான சீர்கேடுகள் சமாதானகாலத்தின் முன்பும் அதிகளவில் நடந்ததா? அல்லது இப்போது தான் இடம் பெறுகின்றதா?அல்லது முன்னர் இடம் பெற்ற சம்பவம் வெளிக்கொண்டு வரப் படவில்லையா?அல்லது இப்போது இவை மிகைப்படுத்தப் பட்டுள்ளனவா? என எழும் பல்வேறு வினாக்களுக்கு பதில்களை ஆராய்வதை விடுத்து யாழ்ப்பாணக் கலாசாரம் தடம்மாறுகின்றது, சீரழிகிறது எனக்கூறுவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

இவ்வாறான சீர்கேடுகள் இடம் பெறும் பட்சத்தில் இந்நிலையை மாற்ற ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நிலைமையைத் தடுக்க முயலவேண்டும். நிலைமை இவ்வாறு மாற்றமடைய எவ்வாறான காரணிகள் தூண்டுதலாக இருக்கின்றன என ஆராயந்து அவற்றை தடுக்க முன்வரவேண்டும். அல்லது சுட்டிக்காட்டி யாழ்ப்பாணத்து கலாசாரம் சீரழிந்து போகாமல் இருக்க பொருத்தமான தீர்வுகளை ஊடகங்கள் முன்வைக்க வேண்டும். தனியாக தவறுகளை மட்டும் எடுத்துக்காட்டாமல் அவை உருவாக ஏதுவான காரணிகளையும் அவற்றிக்கான தீர்வுகளையும் முன்வைக்க முயலுங்கள்.

துவா.என்

# பெண்களின் நிகழ்காலம் சமூகத்தின் எதிர்காலம்

மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினம். இத்தினம் கொண்டாடுவதற்கு காரணங்கள் இருக்கின்றன. இருந்தாலும் குறிப்பாக இத் திகதியை மட்டும் ஏன் தேர்தெடுத்தார்கள்? சற்று வரலாற்றை பின்னோக்கிப் புரட்டிப்பார்த்தேன். வியப்பூட்டும் செய்திகளைப் பல இடங்களில் இருந்து பெற்றுக் கொண்டேன். அன்று பெண்கள் கைகளில் ஏந்திய பதாகைகளுடன் நடத்திய தொடர் போராட்டதிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

1789 ஆம் ஆண்டு யூன் 14 ஆம் திகதி சுதந்திரம் சமத்துவம் மற்றும் பிரதிநிதித்துவம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரான்சியப் புரட்சியின் போது பாரிசில் உள்ள பெண்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.அதாவது ஆணுக்கு சமமாக பெண்கள் சமூதாயத்தில் மதிக்கப் படவேண்டும் என்பதற்காகவும் உரிமைகள் பெறவேண்டும் என்பதற்காகவும் வேலைக்கு ஏற்ற ஊதியம், பெண்களிற்கான வாக்குரிமை, பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதில் இருந்து விடுதலை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கிளர்ச்சிகளை தொடங்கினர். அக் கிளர்ச்சியின் நோக்கத்தினை அனைத்து நாடுகளுக்கும் தெரியப்படுத்தும் வகையில் கிடைத்த ஆயுதங்களுடன் பாரிஸ் நகரில் ஒன்று கூடினர். இருந்த போதும் அந் நாட்டு அரசன் இப் போராட்டத்தைமத் துரும்பாகவே எண்ணினான். இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோரை கைது செய்வேன் எனவும் அறிவித்தான். எனினும் நினைக்க முடியாத எண்ணிக்கையிலான பெண்கள் ஒன்று திரண்டன. கூடவே ஆண்களும் கலந்து கொள்ள, உற்சாகம் கரைபுரள, கோஷங்கள் ·வானைப்பிளக்க, பதாகைகளை கைகளில் ஏந்திய வண்ணம் அரச மாளிகையை நோக்கி பெண்களின் உரிமைக்காக நகர்ந்தது அந்த ஊர்வலம்.அரசமாளிகைக்கு முன்பு ஆர்ப்பாட்டம் செய்த அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காவலர்கள் இருவரை கூட்டத்தினர் தாக்கினர். இருவருமே அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இதைச் சற்றும் எதிர்பாராத அரசன் லூயிஸ் பிலிப் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை பரிசீலிப்பேன் சாதமாகவும் அறிவிப்பேன் என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களை சமாதானப் படுத்தினார். இருந்தும் அது இயலாது போனதால் அரசன் லூயிஸ் பிலிப் முடி துறந்தார். இந்தச் செய்தி ஐரோப்பா முழுவதும் ஒலிக்கவே அங்கும் கிளர்ச்சிகள் வெடித்தன. தொடர்ந்து பல நாடுகளில் போராட்டங்கள் மலர்ந்தன. கிரிஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் மற்றும் ஏனைய பல நாடுகளில்



பெண்கள் கலந்து கொண்டு தொடர் போராட்டத்தை இடைவிடாமல் தொடர்நதனர். இதனால் ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. இதே போல் இத்தாலியில் பெண்கள் வாக்குரிமை பற்றிய கோரிக்கையைச் சமயம் பார்த்து முன்வைத்தனர்.

பிரான்சில் புருஸ்ஸியன் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங் பெண்களை அரசசபை ஆலோசனைக் குழுக்களில் இடம் பெறவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் கொடுத்தார். அந்த நாள் 1848ம் ஆண்டு மார்ச் 8ம் நாளாகும். பெண்களின் குரல் ஒலித்த பொன் நாள் அது. மேலும் பல நாடுகளில் தத்தம் உரிமைக்கான போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. பல மகளீர் அமைப்புக்களும் தோன்றின. போராட்டங்கள் மூலம் தத்தமது உரிமைகளைப் பெறலாம் என்ற சிந்தனை வேகமாகப் பரவியது. கனவாக இருந்த அனைத்தும் பலிக்கத் தொடங்கிய காலம் அது. இதன் விளைவு 1910 இல் பேகனில் சர்வதேச பெண்கள் மாநாடு கிளாரா தலைமையில் கூடியது. அதன் தொடர்ச்சியாக சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911ஆம் ஆண்டு மார்ச் 19ம் திகதி ஜேர்மனி, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து கலந்துகொண்ட கென் பிரதிநிதிகள் முதல் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடினர். அந்தக் கூட்டத்தில் தான் லூயிஸ் பிளாங்க் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல் அளித்தார்.அந்த நாளான மார்ச் 08 இனை மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர்.

பெண்கள் அன்று தொடங்கிய போராட்டங்கள் இன்று வரை ஏதோ ஓர் காரணங்களுக்காக நடந்தவண்ணமே இருக்கின்றன. காலத்தின் தேவைகளுக்கேற்ப தங்களது சவால்களை முன்வைத்து போராடி வருகின்றனர். பெண்கள் இன்றும் ஆணாதிக் கத்தின்நிழலில்தான் இருக்கின்றார்கள் .

சர்வதேச நாடுகளில் இன்று பெண்கள் ஆண்கள் சமத்துவம் பேணப்படுகின்றன. ஆனால் எமது தமிழ் சமூகத்தில் பிரிவினைகள் அடக்குமுறைகள் பல்வேறு கோணங்களிலும் இன்றும் அரங்கேறிக்கொண்டு தான் இருக்கிறது் பெண்களுக்காக அன்று ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் 21நுாற்றாண்டிலும் எந்தவித மாற்றம் இன்றி தொடர்வது தான் ஆச்சரியம். அன்று நல்ல நோக்கத்துக்காக தொடங்கப்பட்ட பல விடயங்கள் காலப்போக்கில் திசை மாறின. இன்று கட்டுப்பாடுகள் என்ற பெயரில் முற்றுமுழுதான அடக்குமுறை கையாளப படுவது தான் எதற்கு?. இன்றைய யாழ்பாணத்தில் தனியாக ஒரு பெண் இரவு நேரத்தில் நடமாட முடியுமா?இவற்றிற்கு பதில் தேடும் போது தான் பெண்களின் நிலை புரியும்.

ரி.கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிவாளம்

## அபிவிருத்தியும் அசிங்கமும்

யாழ்ப்பாணத்திற்கான A-9 வீதி போக்குவரத்து ஆரம்பித்தத்தைத் தொடர்ந்து வெளிமாவட்டத்து மக்கள் வருகை தர ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக யாழ் நகரப்பகுதியில் வெளியூர் மக்கள் அனேகமானோரை காணமுடிகின்றது.

இவ்வாறு பல்வேறு இடத்து மக்களும் வருகை தருவதால் யாழ்.நகரில் சனநெருக்கடி அதிகரித்து வருகின்றது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது. இந்நிலைக்கு துணைபோவது போன்று யாழ்.நகரில் வடிகால்களில் கழிவுநீர் தேங்கி நிற்பதுடன் கழிவுகளும் அகற்றப்படாத நிலையில் உள்ளன. குறிப்பாக யாழ் நகரின் பிரதான வீதிகளின் முன்பாக அதாவது போதனா வைத்திய சாலைப்பகுதி மற்றும் அதற்கு எதிரே உள்ள பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் செல்லும் கால்வாயில் நீண்டநாட்களாக கழிவுநீர் வடிந்தோடாமல் தேங்கி நிற்கும் நிலையே காணப்படுகின்றது. நீர் வழிந்தோடமுடியாத நிலையில் இருமருங்கும் புற்கள் பூண்டுகள் வளர்ந்துள்ளன. இதனை மாநகரசபையினர் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகின்றோம்.

மேலும் யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியில் அமைந்திருக்கும் கால்வாயிலும் கழிவுநீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகிறது. இதன் அருகில் வியாபாரநிலையம் வைத்திருப்பவர்களும் சிரமத்தை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர். அங்கு வியாபாரம் புரியும் வியாபாரிகள் இது தொடர்பான தம் பிரச்சினையைத்தெரியப்படுத்த பெரிதும் தயங்கிவருவதை கண்ணூடாகக் காணமுடிகின்றது. இது மட்டுமின்றி யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியில் குடிமக்கள் வாழும் பிரதேசத்தில் வீட்டுக் கழிவுகள் வீசப்பட்டுள்ள நிலைமையும் காண முடிகின்றது. மாநகரசபை ஊழியர்களால் அவ் வீதி சுத்தப்படுத்தப்பட்டாலும் கழிவுகள் தினமும் சேர்ந்த வண்ணமே உள்ளன.

குப்பை போடதீர் என்ற அறிவுறுத்தல் அங்கு வழங்கப்பட்டிருந்தும் அதனை அங்கு வாசிப்போர் கவனத்தில் கொள்ளாமல் குப்பைகளைஅப்பகுதியில் வீசுவதால் அங்கு செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாண மீன் சந்தைப்பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு மாநகரசபையினரால்இடம் ஒதுக்கப்பட்டுள்ளது ஆனாலும் அப்பகுதிக்கு வெளியே குப்பைகள் விசிறப்பபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இதனால் அங்கு நடமாடும் கால்நடைகள் அவற்றை உட்கொண்டு பாதிப்பை எதிர்கொள்ளும் நிலையும் உள்ளது.

எனவே யாழ் மாநகரசபையினர் இவ்விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தவேண்டும் இவர்கள் மட்டுமன்றி மக்களும் கழிவுகளை அகற்றுவது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டும்.நம் சூழலை பாதுகாப்பது நமது கடமை ஏனெனில் இதனால் உண்டாகும் தொற்றுநோய்கள் அபாயகரமானது அவற்றில் இருந்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்

வெளிமாவட்டத்தினரதும் வருகையும் அதிகரித்துள்ளமையால் யாழ்.மாநகரசபையினர் யாழ்நகரமக்களதும் வெளிமாவட்டத்து மக்களதும் நலனைக் கருத்திற்கொண்டு பிரச்சனைக்குரிய பகுதிகளைச் சுத்தப்படுத்திச் சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற் கொள்ளுமாறும் கோரிக்கைவிடுக்கிறோம்.

## பெருகிவரும் முதியோர் இல்லங்கள்

முதியோர் இல்லங்கள் பிள்ளைகள், வாரிசு இல்லாதவர்கள் தமது முதுமைக்காலத்தை கொண்டு நடத்துவதற்கான ஓர் இடமாகவே காணப்பட்டன. இன்றைய தமிழ்ச்சமூகமானது ஆதரவற்றவர்களின் பாதுகாப்பகமென முதியோர் இல்லத்தை கருதுகின்றது. நாடுகின்றனர். சிலர் வீடுகளில் தமது பிள்ளைகளை பராமரிப்பதற்காக வேலைக்காக தம்முடன் வேறு நபர்களை வைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு பல்வேறு கருத்துமுரண்பாடுகள் காரணமாக முதியோர்கள் வீடுகளில் இருக்கவிரும்பாது முதியோர்இல்லங்களை நாடுகின்றனர்.



ஆரம்பகாலங்களில் அளவுக்கு அதிகமாக ஒரு குடும்பத்தில் பிள்ளைகளை பெற்றதனால் அவர்களுக்கு ஏற்ற கல்வித்தரமானது கிடைக்காது போனது. அவர்களுக்கான சரியான சமூக வழிகாட்டல் கிடைக்கப்பெறாமையால் பெற்றோர்களுடன் இருந்து அவர்கள் சொற்படி நடந்தனர். அக்காலப்பெண்கள் பொறுப்பாக காணப்பட்டதனால் முதியோர்களைப் பாதுகாத்து வந்தனர் . எனினும் தற்காலத்தில் பெண்கள் பொருளாதார முன்னேற்றத்தைக் கவனிக்க விளைவதன் காரணமாக தம் பெற்றோரை கவனிக்கத் தவறுகின்றனர். பெண்கள் வேலைத்தளங்களுக்கு செல்வதால் வீட்டு வேலைகளை கவனிப்பதற்கு நேரம் இல்லாமல் இவர்கள் பெற்றோர்களுக்கான பணிவிடையை செய்யத்தவறுகின்றனர். இவ்வாறான சூழல் உருவாகும் போது முதியோரிடம் மனக்கசப்பு ஏற்படுகின்றது. அதனால் அவர்கள் தமது வாழ்வை நோக்கிய பயணமாக முதியோர் இல்லத்தை நாடுகின்றனர். பெற்று வளர்த்த தாய் தந்தையைத் தனது குடும்பத்தின் சுயநலத்திற்காக உதறுகின்ற சூழ்நிலையை நாம் இங்கு கண்டு கொள்ளலாம். நாகரீகத்தை நோக்கிய இன்றைய உலகில் வயதானவர்கள் பிள்ளைகளால் ஒதுக்கப்படுகின்றனர்.பத்து மாதம் பத்திரமாக காத்து நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தி உழைத்து உயிர்பிச்சை கொடுத்தவர்கள் இவர்களுடைய இயலாமையால் ஒதுக்கப்படுகின்றனர். இவ்வாறு முதியோர் இல்லங்கள் தோன்றுவதற்கு சமூகமாற்றம் காரணமா?அல்லது பெற்றோர்கள் தமது வாழ்கைக்கு இடைஞ்சலாக காணப்படுகின்றனர் என்பதற்காகவா?என்பது புரிந்து கொள்ள முடியாததாகவுள்ளது. முதியவர்கள் தமது இயலாமை காரணமாக பிள்ளைகளிடம் சில உதவிகளை எதிர்பார்க்கின்றனர் இவர்கள் நாடிய உதவி கிடைக்காவிடின் விரக்தியின் காரணமாக அவர்கள் முதியோர் இல்லங்களை



இவ்வாறு கைவிடப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக மனித நேயமிக்கவர்களால் உருவாக்கப்பட்ட முதியோர் இல்லங்களை தமது வசதிக்காக பயன்படுத்துகின்றனர். முதியோர் இல்லங்கள் இன்று பல்வேறு தனியார் மற்றும் அரச நிறுவனங்களால் இயக்கப்பட்டுவருகின்றன. யாழ்ப்பாணம் கைதடியில் சாந்தி நிலையம் எனும் பெயரில் முதியோர் இல்லம் இயங்கி வருகின்றது. இங்கு 140 வரையிலான முதியோர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இங்கு வசிக்க வந்தவர்கள். மன்னாரில் இயங்கி வருகின்ற முதியோர் இல்லம் லண்டன் ஸ்ரீ துர்க்கைஅம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கி வருகின்றது. இங்கு 40 முதியவர்கள் வரை தொடர்ந்து வசித்து வருகின்றனர். இங்கு மனரீதியாக பாதிககப்பட்டவர்கள் ,கண்பார்வையற்றவர்கள் ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்பவர் அடங்குகின்றனர். திரு கோணமலை காயத்திரி கிராமத்தில் இயங்கிவருகின்ற கணேசா முதியோர் இல்லமானது 2006 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு 09 முதியோர்கள் வாழ்ந்துவருகின்றனர். இதைவிட முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற முதியோர் இல்லமானது தற்போது வவுனியா கோவில்குளம் எனும் இடத்தில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலய முதியோர் இல்லத்துடன் இயங்கி வருகின்றது. இங்கு 58 முதியோர்கள் வரை வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு இன்று முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. இந்நிலைமை மாற்றமடைய வேண்டும். இதற்கு பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒருவரை ஒருவர் குறைசொல்வதை விடுத்து கடமையை உரிய முறையில் செய்து வந்தால் இவ்வாறான நிலைமைக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும்.

**துவா.என்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையில்லாப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் சுயதொழில்

## சுன்னாகத்தை சேர்ந்த பெண் ஒருவரின் சுயதொழில் முயற்சி

இன்றைய காலத்தில் குடும்பத்தின் தலைமைத்துவப் பொறுப்பைக்கொண்ட பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். இன்றைய பெண்கள் மற்றவர்களை விட தொழில் வாய்ப்புக்களை அதிகமாகத் தேட வேண்டிய கட்டாயம் உள்ளது. சுன்னாகம் தையல் நிலையத்தில் தையல் தொழிலினை மேற்கொண்டுவரும் திருமதி எஸ். வசந்தா தான் செய்யும் தொழில் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் கூறுகிறார். "நான் கடந்த 20 வருடங்களாக தையல் கலையைத் தேர்தெடுத்து தொழில் செய்து வருகிறேன். இந்த தொழிலைத்தேர்வு செய்வதற்கு மூலகாரணம் எனது தாய். பரம்பரையாகவே தையல் தொழிலை ஆர்வத்துடன் செய்து வருகின்றோம். சிறு வயதிலே நான் ஆர்வத்துடன் தாயார் தைக்கும் போதும் ஆடைகளைத் வெட்டும் போதும் அவதானிப்பதோடு சிறிய துணிகளில் வெட்டிப் பழகுவேன். எனது பாடசாலை காலம் முடிவடைந்ததும் தாயாருடன் இணைந்து ஆடைகளை அளவிற்கேற்ப வெட்டவும் தைக்கவும் பழகிக் கொண்டேன். என்னுடைய குடும்பம் நடுத்தரக்குடும்பம் என்பதால் இதன்மூலம் கிடைக்கும் வருமானம் எனது குடும்பத்திற்குப் பெரும் உதவியாக இருந்தது. எனது திறமையால் அதிகளவு வாடிக்கையாளர்கள் தங்களது ஆடைகளைத் தைப்பதற்காகத் தேடிவந்தார்கள். எண்ணிக்கை அதிகரிக்க எமது வீட்டில் தைப்பதற்கு இட வசதி இன்மையால் வீட்டிற்கு அருகில் சிறிய கடையை அமைத்துக் கொண்டேன். தற்போது என்னிடம் வாடிக்கையாளர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரச தொழிலை மேற்கொள்ளும் பெண்களே. பெண்கள் சார்ந்த சகல ஆடைகளையும் என்னால் தைக்க முடியும். ரெடிமெட் ஆடைகளை விட நாமாக தைக்கும் ஆடைகள் நீண்ட காலப் பாவணைக்கு உகந்ததாக இருக்கின்றன என வாடிக்கையாளர் கூறுவார்கள். தற்போது மூன்று பெண்கள் உதவியாளர்களாக வேலை செய்கின்றனர்" என்று கூறினார்.

**வேலை இல்லை என்று சொல்வதை விட சுயமாக தொழில் செய்வதன் மூலம் அதிக வருமானத்தை பெற்றுகொள்ள முடியும்**

வீட்டில் இருந்தவாறே வேலைகளையும் செய்து அதிகளவு வருமானத்தையும் சுய உழைப்பினால் பெறக்கூடிய தையல் கலை பெண்களுக்கு எப்பொழுதும் கை கொடுக்கும். தையல்கலை மூலம் ஏனையோர் பயன் அடைவதை விட தையல் தெரிந்த பெண்கள் தமக்கு தேவையானஆடைகளை விருப்பத்திற்கேற்ப தைக்க முடியும். இந்த தையல் கலையானது முக்கியமாக குடும்பங்களில் தலைமை பொறுப்பைக் கொண்ட பெண்களின் வாழ்விற்கு எப்போதும் கைகொடுப்பதுடன் தமது குடும்பப் பொறுப்புகளின் தேவைகளை நிறைவேற்ற இன்னொரு வரை நம்பி வாழ வேண்டிய தேவையும் இல்லை. இன்னொருவரின் ஏவலுக்கு வேலை செய்யும் பெண்கள், தான் சுயமாக இலகுவாக செய்ய கூடிய தையற்கலையைத் தேர்ந்தெடுப்பதற்கு நாட்டம் கொள்வது இல்லை. இலங்கையில் இருந்து தைத்த ஆடைகள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதிகளவு அந்நிய வருமானத்தை இக்கைத்தொழில் பெற்றுத் தருகின்றது.

வேலை இல்லை என்று சொல்வதை விட சுயமாக தொழில் செய்வதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகை யில் இனங்காணப்பட்ட பெண் வீட்டிற்கு அருகிலுள்ளவர்களை வாடிக்கையாளர்களாக அதிகளவு கொண்டிருப்பதுடன் அருகிலுள்ள பாடசாலை நிகழ்வுகளுக்கு ஆடைகளை தைத்து வழங்குகிறார்.




இன்னும் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிப் பல வடிவங்களில் ஆடைகளைத் தைத்து சந்தைப் படுத்த வேண்டும் என்பது தான் இவருடைய நோக்கமாக உள்ளது.

முருகாந்தினி

# சாவை நோக்கிய சமாந்தரப் பயணம்

சாவுக்கு வழிசமைக்கும் சமாந்தரப் பயணங்கள் சர்வசாதாணமாக இடம்பெற்று வருகின்றன. பாடசாலைக்குப் போகும் போதும், பாடசாலை முடிந்து வரும் போதும், தனியார் வகுப்புகள் முடிந்தவுடனும், இத்தகைய பிரயாணங்களை அதிகளவு காணமுடியும். போக்குவரத்து நெருக்கடி



இருக்கின்ற இடங்களிலும் இவ்வாறு சமாந்தரமாகப் பயணிப்போரால் போக்கு வரத்து நெருக்கடி ஏற்படுகின்றது. இதை அவர்கள் உணரவில்லையா? அல்லது உணர்தப்படவில்லையா?

வீதிகளில் பொலிஸாரைக் கண்டதும் ஒருவர் பின் ஒருவராகச் செல்வதும் பொலிஸார் நிற்காத இடங்களில் "பழைய குருடி கதவை திறவடி" கதையாக சமாந்தரமாகச் செல்வதும் மாணவர்கள் சிலரது அன்றாட செயற்பாடு. இத்தகைய செயற்பாடுகள் தேவையற்ற வீதி விபத்துக்களுக்கு வழிகோலிடும் அபாயம் உண்டு. நண்பர்களுடன் அரட்டையடித்துக் கொண்டு அவர்களின் சமாந்தரப் பயணம் தொடரும். பின்னால் வருபவர்களுக்கு வழிவிட்டு கொடுக்க மாட்டார்கள். தமக்கு மட்டும் வீதி சொந்தம் என்ற நினைப்பில் அவர்களது பயணம் தொடரும். பின்னால் வருபவர்கள் வழிவிடக் கேட்டால் என்ன வார்த்தை அவர்களின் வாயிலிருந்து வரும் என்று உங்களுக்கே தெரியும். குன்றும் குழியுமாக காணப்படும் வீதிகளில் சமாந்தரப் பயணங்கள் உயிர்களை பறிக்கும் எமனாக தெரிகின்றது. ஆண்கள் மட்டும் தான் முன்னைய காலங்களில் சென்றார்கள் என்றால் தற்போதைய பாரதி கண்ட புதுமைப் பெண்களும் அவ்வாறே செல்கின்றனர். கடுமையான சட்டங்கள் இல்லாததன் காரணமாகவே இந்தக் குற்றச் செயல்கள் தொடர்கின்றன. "தண்டனைகள் சிறிதாக இருப்பதனால் தான் தவறைப்பற்றிய பயம் இல்லாமல் இருக்கின்றனர். தண்டனைகள் பெரியளவில் இருந்தால் உயிர்ப்பயம் காரணமாக தவறு செய்யமாட்டார்கள்". சமாந்தரமாக சென்றால் தண்டனை அபராதம் மட்டுமே. ஆகையால் பிடிபட்டாலும் பெரிய விளைவு இல்லை என்ற எண்ணத்திலேயே செல்கின்றனர். இதில் இன்னொரு விடயம் என்னவெனில் யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபடும் பொலிஸாரும் எப்போதாவது விழித்துக் கொண்டது போல் சமாந்தரமாக செல்பவர்களைக் கைது செய்வார்கள். அதுவும் பிரதான வீதிகளிலேயே இவர்களது கடமை இருக்கும்.சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொலிஸாரே நீங்கள் உங்கள் கடமையை மூலை முடுக்கெங்கும் செய்யுங்கள். சமாந்தரமாக செல்பவர்களுக்கு ஆகக் கூடுதலாக என்ன தண்டனை வழங்க முடியுமோ வழங்குங்கள். இதன் மூலமாவது சமாந்தரப் பயணத்தினால் ஏற்படும் வீண் உயிரிழப்புக்களைத் தடுக்க முடியும்.

முருகாந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் முயற்சியும்

பல நூற்றாண்டுகள் உருண்டோடினாலும் தமிழர்கள் என்ற நாமம் அழிந்து விடப்போவதில்லை. எமது நாட்டின் தமிழர்களின் வாழ்வியலை முன்னோக்கி பார்ப்போமானால் அது விந்தை மிகுந்த வீரவேட்கையோடு வியக்கத்தக்க பல விடயங்களை முயற்சிகளால் செய்து அழியா முத்திரையை தனக்கென்று வைத்திருந்த காலங்களும் உள்ளன.

நிறவெறி கொடிகட்டிப்பறந்து கறுப்பின மக்கள் கரப்பான்பூச்சிகளெனக் கருதப்பட்டுக்கொண்டிருக்கும் காலம் இது. மங்கிப்போன எமது மனித வாழ்வு மாண்புறாதா என்று கால நதிக்கரையில் கலங்கி நிற்பவருக்கு மனிதமுயற்சியினால் மனது விரித்து வாழ்வு வழங்கிட நம் சிந்தனைகளை சீர்தூக்கிப் பார்ப்போம்.

**ஆன்மீகவாதியாகவோ, அரசியல்வாதியாகவோ, தர்மவானாகவோ மாறச்சொல்லி அல்லது வேடம் போடச்சொல்லி யாரையும் இந்த சமூகம் கெஞ்சியதில்லை. படியேறி மனுக் கொடுத்ததில்லை. அல்லது இவர் போடும் வேசத்தை கண்டு இவரன்றோ சத்தியவான் என்று எங்கள் சமூகம் இவர்கள் பின்னே சென்றதும் இல்லை. இப்படியிருக்க இவர்கள் ஏன் வேசம் போடுகிறார்கள்.** என்று மனச்சாட்சி உறுத்த வேண்டும். குடிப்பவன் ஒரு தவறு செய்கிறான். குடித்து விட்டு இல்லை என்று மறுப்பவன் இரண்டு தவறு செய்கிறான். சமூகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் இந்த உண்மை பொருந்தும்.' குடிப்பது நடத்தைக்கேடு என்கிறது சமூகம். பாவம் என்கிறது ஆன்மீகம். ஆனால் மனிதன் இரண்டும் செய்யவே ஆசைப்படுகிறான். இரவிரவாக குடித்து விட்டு பகலில் பிரமபிதா என்றும், பரமசிவனே என்றும் பஜனை பண்ணிக்கொள்ள துடிக்கின்றான். இவர்களுக்கு வந்த நோய் என்ன? முயற்சியை பிழையாக பயன்படுத்தியது தான்.

வாழ்க்கையில் முயற்சி என்பது எரிகின்ற தீபத்திற்கு காற்றுப்போல் அமைய வேண்டும். காற்று அளவாக வீசினால்தான் தீபம் எரியும். காற்று இல்லாவிட்டால் தீபம் எரியாது. காற்று அதிகரித்து விட்டாலே தீபம் அணைந்துவிடும். இவ்வாறு தான் எமது முயற்சியும் அளவோடு அமைதல் வேண்டும். சிறிய படகை வைத்துக்கொண்டு கடலில் மீன் பிடித்து விடலாம் என்பது நியாயமான முயற்சி .அதே படகில் ஏறி உலகை வலம் வரலாம் என்று நினைத்தால் வெறும் கற்பனையாகி விடும். செயற்படத் துணிந்தால் அழிவு தான் நேரிடும். அநாதைகள் ஆதரவு அற்றோர் ஆணிவேரை இழந்தோர் என சமூகத்தால் சித்தரிக்கப்பட்டு முகவரி இழந்த முகங்களுக்கு முன்வந்து உதவி செய்தவர் அன்னை திரேசா. இவருடைய வாழ்விலே இவரது முயற்சயினால் பல கரங்கள் உயர்ந்ததையும் நாம் காணலாம். ஒருமுறை அன்னையவள் தனது இரு கைகளையும் நீட்டி ஒரு இளைஞனிடம் குழந்தை உள்ளத்தோடு பிச்சை கேட்கின்றார். இளைஞன் தனது எச்சிலை பரிசாக முகத்திலே கொடுக்கின்றான். அன்னை மனம் கோணாமல் இது எனக்கு நீங்கள் கொடுத்தது. என்னை நம்பி இருப்போருக்கு ஏதாவது கொடுங்கள் என்றார்.

அன்னையினுடைய இச் சிறிய சம்பவத்திலே அன்னையினுடைய இரக்க முயற்சி வெளிப்பட்டு இருப்பதை காணலாம். முதல் தடவை தன்மீது எச்சில் விழுந்த போது அன்னை தன்னுடைய இல்லத்திற்கு சென்றிருக்கலாம். ஆனால் இரண்டாவது தடவையும் முயற்சி எடுத்துக் கேட்டார்.

தோமஸ் அல்வா எடிசனின் வாழ்விலே மின் குமிழிலே அவரின் முயற்சிக்கு சான்று பகர்கின்றது. நூற்றுக்கணக்கான முயற்சியையும் மேற்கொண்ட எடிசன் மின்குமிழை ஒளிரவைக்க முடியாது தத்தளித்தார்.மீண்டும் மீண்டும் முயற்சி செய்து ஆயிரத்திற்கு மேலேயே தனது முயற்சியின் பயனாலே வந்த மின்குமிழை சுவீகரித்துக் கொண்டார். அன்னைதிரேசா, தோமஸ்அல்வா எடிசன் ஆகிய மனிதமுயற்சி கொண்ட மனிதர்கள் வாழ்ந்த மண்ணிலே இன்று மனிதமுயற்சி மண்டியிடும் வகையில் மாண்டு கிடக்கின்றது.

முயற்சியே வாழ்வின் முழுப்பலமாக வாழ்ந்த இவர்களுடைய பாதச்சுவடுகளை நாம் ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டும். கூட்டமாகப்பறக்கும் பறவைகளுக்கும் அலைந்துதிரியும் விலங்குகளுக்கும் உள்ள முயற்சி கூட இன்று மனிதர்களிடம் இல்லை. பிரிந்து போன குடும்பங்கள் ஏன் இன்று நிரந்தரமாக பிரிந்து வாழவேண்டும்?.மனிதன் தவறுவிடுபவன் தண்டனையைப் பெற்றுக் கொள்ளும் மனிதன் ஏன் முயற்சியினால் இணைந்து வாழமுடியும். என்பதனை மறந்துவிடுகின்றான். முயற்சியினால் குடும்பத்தில் நிம்மதியாக வாழமுடியும் என்று உணர்ந்த குடும்பங்கள் எமது சமூகத்தில் எத்தனை எத்தனை? இத்தனையும் மனம் மாறவேண்டும் அப்போதுதான் விடியல் பிறக்கும். மாற்று வலுவுள்ளோர் களில் சிலர் இன்றும் பல்கலைக்கழகத்திலே படித்து பட்டங்கள் பெற்றிருக்கின்றனர். காரணம் அவர்களின் முயற்சி. இவர்களில் சிலர் கலைஞர்களாகவும் மேதையர்களாகவும் தலைவர்களாகவும் உள்ளனர். சமூகத்திலே விதவைகள் பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட முதியோர்கள் என்று பல தரப்பட்டவர்கள் இன்றும் தமது முயற்சினால் ஏதாவது ஒரு சிறு தொழில் ஈடுபட்டு தம்மைக் காப்பாற்றுகின்றனர். நகமும் தலையும் வெட்டவே தெரியாத பண்டைய சமூகம் கல்லை உரசி தீயைக் கண்டுபிடித்தனர். பல நூற்றாண்டுளுக்கு பின்பு விஞ்ஞானம் உச்சி முதல் உள்ளங்கால்வரை ஆணி வேறு அக்குவேறாக பிரித்து சிகிச்சை செய்யும் அளவிற்கு வளர்ந்திருப்பதற்கு முயற்சியே மூல காரணமாகும்.பறவைகளாலும் பனை ஓலைச்சுவடுகளாலும் தொடர்புகொண்டான். ஆனால் மனிதன் இன்று தொலைபேசிகளிலும் அச்சு ஊடகங்களிலும் கணனிமூலமும் தன் தொடர்பினை ஏற்படுத்துகின்றான். இயலாத ஒன்று இருக்காது என்று வாழ்ந்த மாமேதைகளை பின்பற்றி முயற்சி கொண்டு பயிற்சி செய்வோர் பயிற்சி கண்டு உயர்ச்சி அடைவார்.

ஜெகன்


## கனடிய முதல் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா தமிழ் அவையுடன் சந்திப்பு.

கனடிய பாராளுமன்றத்தேர்தலில் புதிய ஜனநாயகக்கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற ராதிகாசிற்பேசன் அவர்களுடன் கனடிய தழிழ்த்தேசிய உறுப்பினர் அண்மையில் சந்தித்துப்பேசினர்.

கனடியத் தழிழ்த்தேசிய அவையின் பணிமனையில் மே மாதம் 8ம் திகதி இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் கனடியத் தமிழ் மக்கள் கலந்து கொண்டு அவரை வாழ்த்தியதுடன், தங்கள் கேள்விகளையும் முன்வைத்தார்கள். அத்தனை கேள்விகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்பேசனும் அவரின் ஊடக ஒருங்கிணைப்பாளர் திரு.பீற்றர் அவர்களும் பதிலளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரான ன் ராதிகா சிற்பேசன் முதல் மக்கள் சந்திப்பை கனடியத்தழிழர் தேசிய அவை தங்கள் பணிமனையில் நடாத்தியதையிட்டு பெருமை கொள்வதாக கூறியுள்ளது. கனடிய அரசியல் நீரோட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மக்களுக்கு தன்னலான சேவையை இவர் வழங்கவேண்டும் என்று கனேடிய தழிழ்த்தேசிய அவை வேண்டிக் கொண்டதுடன் மீண்டும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டது.

## பேராசிரியர். மௌனகுருவுடனான கலந்துரையாடல்



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் போராசியர். மௌனகுரு அவர்களுடனான கலந்துரையாடல் 31.05. 2011 செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. காட்சி ஊடகத்தொடர் பாடல் மற்றும் மக்கள் தொடர்பாடல் பற்றி ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கு பேராசிரியர் கருத்துரை வழங்கினார். பேராசிரியர். மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழக தழிழ்த் துறைத்தலைவராகவும், பீடாதிபதியாகவும் பணியாற்றியதுடன் விபுலானந்தா நுண்கலைக் கல்லூரியின் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் தற்போது விபுலானந்தா நுண்கலைக்கல்லூரியின் வருகை விரிவுரையாளர் ஆவார். இவர் மட்டக்களப்பு பாரம்பரிய கூத்துக்கள் தொடர்பாக தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டவர். நாடக அரங்கத்துறையில் ஈடுபாடுடைய இவர் பல்வேறு நூல்களையும் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் வித்தியானந்தனுடன் இணைந்து கூத்து புத்தாக்க முயற்சியில் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீதி திருத்தப்பட வேண்டும்

மந்திகையில் இருந்து வல்லிபுரக் கோயிலுக்கு செல்லும் வீதி பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இவ் வீதியால் பயணம் செய்யும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வீதியினால் அதிகளவிலான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. அதிலும் மண்லொறிகள் அதிகளவு இவ் வீதியினால் பயணிக்கின்றன. திருவிழா காலங்களில் இவ் வீதியில் அதிக சன நெருக்கடி ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. இவ் வீதியை புனரமைப்புச் செய்தல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ல நினைக்கின்றேன்


அமைதியான அந்த இரவு நேரத்திலே யாரோ புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார்கள். நிலவொளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஏகாந்தம் மிக்க குளிர் நிறைந்த இரவு எங்கிருந்தோ காற்றிலே மிதந்துவரும் புல்லாங்குழலின் ஓசை இனிமையான சொப்பனமாகத் தோன்றியது. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அது மிகவும் அழகாக இருந்தது.ஒரு மூங்கிலின் வெற்றுக்குழலில் எத்தகையதோர் அமிர்தமான இசை. வாழ்க்கையும் ஒரு புல்லாங்குழல் போன்றது தான். தன்னிலே அது வெறுமையான சூன்யமாகவுள்ளது ஆனால் கூடவே ஒரு மாபெரும் சங்கீதத்தைப் பிரதிபலிக்கும் தகுதியையும் பெற்றுள்ளது. எல்லாம் அதை மீட்பவர்களைப் பொறுத்துள்ளது. எவ்வாறு ஒருவன் அதனை மீட்கிறானோ, வாழ்க்கை அவ்வாறே மாறிவிடுகிறது. அதனைத் தீர்மானிப்பது அவனே. இது அவனுக்கொரு சந்தர்ப்பம் மட்டுமே எத்தகைய இசையை மீட்க அவன் விரும்புகின்றானோ, எல்லாம் அவன் கையிலே உள்ளது. மனிதனின் மகிமை எதுவென்றால் நரகத்தையோ, சொர்கத்தையோ அமைத்துமொள்ள அவன் முழு சுதந்திரம் பெற்றிருக்கிறான்.

ஒவ்வொரு மனிதனும் தம் புல்லாங்குழலிலிருந்து சுகமான ஒலியை எழுப்ப முடியும். வாசிப்பதற்குத் தக்கவாறு தம் விரல் தான் இங்கே அவசியம். கொஞ்சம் முயற்சி எடுத்தால் போதுமானது. கிடைப்பதோ மாபெரும் வெகுமதி. ஒன்றும் செய்யாமல் இருப்பதிலே நிறைந்த சந்தோசத்தின் ஆட்சி நமக்கு கிட்டிவிடுகிறது.ஒவ்வொருவரும் தத்தம் புல்லாங்குழல்களை எடுத்து மீட்கும்படி நான் எல்லோருடைய இதயத்திலும் புகுந்து சொல்லிவிட வேண்டுமென்று விரும்புகிறேன். காலம் மிக வேகமாக கடந்து கொண்டிருக்கிறது. இசை மீட்டுவதற்க சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடகூடாது. திரைவிழுவதற்கு முன்னே நீங்கள் உங்கள் ஜீவ இசையை மீட்டு கொள்வதுநல்லது.

# டெண்டுல்கரின் டுவிட்டர் சாதனை

கிரிக்கெட்டில் ஏராளமான சாதனைகளை படைத்துவிட்ட சச்சின் இப்போது டுவிட்டர் இணையத்தளத்திலும் சாதனை படைத்துள்ளார். சமூக வலைத்தளமான டுவிட்டரில் அதிகமானோரை ஈர்ந்துள்ளார் சச்சின். ஒரு வாரங்களுக்கு முன்பு டுவிட்டரில் அவரை பின் தொடந்தவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்து 83 ஆயிரத்து 174 ஐ எட்டியுள்ளது.

இதன் மூலம் டுவிட்டர் இணையத்தளத்தில் அதிக ரசிகர்களைக் கொண்ட இந்தியர் என்ற பெருமையை பெற்றுள்ளார். டுவிட்டர் இணையத்தளத்தில் உலக அளவில் அதிகம் பின் தொடர்பவர்களைக் கொண்டவர்களின் பட்டியலில் 90 இலட்சம் பேருடன் அமெரிக்க பொப் இசைப்பாடகி லேடிகாக முதலிடத்திலும் 80 லட்சம் பேருடன் பொப் பாடகர் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.




# இளவரசியானார் விமான ஓட்டியின் மகள்



கல்யாணம் என்றால் ஊரே களைகட்டி விடும். குதூகலம் விண்ணை முட்டும். அதுவும் பிரிட்டனின் அரசகுடும்ப கல்யாணம் என்றால் சொல்லவா வேண்டும்? பெரிதாக பேசப்பட்ட இளவரசர் சாள்ஸ் - டயானா கல்யாணத்துக்குப் பின் மீண்டும் பிரிட்டனில் அவர்களின் மகன் வில்லியமின் கல்யாணம் களைகட்டியது. அரச குடும்பத்தின் திருமணங்கள் மற்றும் மரணச்சடங்குகள் நடைபெறும் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் இளவரசர் - கேற் திருமணம் நடைபெற்றது. 1947 நவம்பர் 20 அன்று இன்றைய எலிஸெபெத் மகராணியின் திருமணமும் இதே வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் தான் இடம்பெற்றது. மணமகள் கேற்1982 ஜனவரி மாதம் 9ஆம் திகதி பிறந்தவர் சென் அன்ரூஸ் பல்கலைகழகத்தில் கற்கும் போது 2001 இல் வில்லியமை சந்தித்தவர். பல போட்டிகளில் அனைவரையும் வெகுவாக கவர்ந்துவிடுவார். வெற்றிகளையும் குவிப்பார். இது வில்லியமை கவர்ந்தது. 2002 இல் காதல் மலர்ந்தது.வில்லியமின் தாயார் மறைந்த டயானா, பிரபுக்களின் வம்சத்தைச் சேர்ந்தவர். ஆனால் தற்போது பக்கிங்காம் அரண்மனையின் மருமகளாகியுள்ள கேற்மிடில்டன், சாதாரண குடும்பத்தைச்சேர்ந்தவர். பிரிட்டனின் பெர்க்ஷைர் பகுதியைச் சேர்ந்த மிடில்டன், பிரிட்டன் விமானப்படை அதிகாரியாக பணியாற்றியவர். இவர் தான் கேற்றின் தந்தை. சில ஆண்டுகளுக்கு முன், மிடில்டன், "பார்ட்டி பிசெஸ்" என்ற மெயில் ஓடர் நிறுவனத்தை தொடங்கினார். இதில் பணம் கொட்டியது. இதனால், மிடில்டன் குடும்பம் கோடீஸ்வர குடும்பம் ஆனது. இன்று இளவரசியாகியுள்ளார்.

(முதலாம் பக்க தொடர்ச்சி......)


**யாழ் நகரில். ...**

போது வாகனங்கள் அங்கு இருப்பதில்லை. காரணம் சைக்கிள் பாதுகாப்புநிலையம் வைத் திருக்கும் நபர்கள் அவற்றை பாதுகாப்புநிலையத்திற்குக் கொண்டு செல்வது தான். அனைவரும் அறியும்படி அத்தரிப்பிடத்திற்கான பதாகைகள் அமைத்தால் ஏன் இந்த நிலை? இத்தகைய அடாவடிகளை நிறுத்தி யாழ்.நகருக்கு வந்து செல்லும் மக்கள் தம் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாநகர சபையினர் வாகனங்களை தரித்து நிறுத்துவதற்கான தரிப்பிடங்களை அமைத்து பயணிகளுக்கும் பாதசாரிகளுக்கும் ஏனையவர்களுக்குமான சிரமத்தை போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# பிறர் புகையால் வருடாந்தம் ஆறு லட்சம் பேர் மரணம்

புதிய ஆய்வொன்றின் தகவல்படி தான் புகைப்பிடிக்காமல் புகைப்பழக்கம் உள்ளவர்களுடன் தொடர்புடையதாலேயே மரணமடைபவர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு ஆறு லட்சம் பேர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் பொதுவாக ஏனையவர்கள் புகைப்பிடிக்கும் போது அருகில நிற்போம். மதுபான விடுதிகளிலும் பிற பொது இடங்களிலும் சிகரெட் புகையினால் பாதிக்கப்படுபவர்கள் புகைப்பிடிப்பவர்கள் மட்டுமல்ல, அருகில் நிற்பவர்களும் தான். பிரிட்டன் மருத்துவ இதழான லான்செட்டில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுத் தகவல்களின்படி குழந்தைகளின் 40 சதவீதத்தினரும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரில் 30 சத வீதத்தினரும் இம்மாதிரியான பிறரது புகைப்பழக்கத்திற்கு பாதிக்கப்படுகின்றனர். ஆண்டொன்றிற்கு பிறரது புகைப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பவர்களில் இருதயநோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 379,000 என குறிப்பிடுகின்றனர். உலகில் நிகழும் மரணவிகிதத்தில் பிறரது புகைக்கு மரணமடைபவரின் வீதம் 1% என்று லான்செட் அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார். 51 லட்சம் பேர் ஆண்டு முழுவதும் உலக அளவில் புகைப்பழக்கத்தினால் உயிரிழக்கின்றனர் எனில் அதில் 603,000 பேர் பிறரது புகைப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வரு கின்றனர். 2004 ஆம் ஆண்டு முதல் 192 நாடுகளில் பல்வேறு தரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்த புள்ளிவிபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பிறரது புகைப்பழக்கத்தினால் மரணமடைபவர்களின் எண்ணிக்கையில் ஐரோப்பாவும் ஆசியாவும் தான் முன்னிலை வகிக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலத்திற்கு அச்சுறுத்தலாகி விட்ட அணுசக்தி

அணுமின் நிலையம் ஒன்றை நிறுவத்திட்டமிட்டிருந்த சுவிஸ்லாந்து அத்திட்டத்தை முழுமையாக கைவிட்டு விட்டதாக அறிவித்துள்ளது. ஜேர்மனியில் உடனடியாக 1980க்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட 7 அணுமின் உலைகள் மூடப்பட்டுள்ளன. பசுமைக் கட்சியினர் [green pasty] எதிர்வரும் 2017 ஆண்டுடன் சகல விதமான அணுமின் உலைகளும் மூடப்பட்டு இயற்கையான முறையில் மின்சார உற்பத்தி செய்ய வேண்டும் எனக் கோரி வருகின்றனர். ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இணைந்து பொது உடன்படிக்கையின் அடிப்படையில் அணுமின் உலைகளை குறைக்கும் அல்லது இல்லாமல் செய்யும் உடன்பாடுகளை எட்ட வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். இது வரை மின்சார உற்பத்திக்கு அணுமின் உலைக் கட்டுமானத்தை உருவாக்கிய 35க்கு மேற்பட்ட நாடுகளில் 450க்கு அதிகமான அணுமின் உலைகள் உள்ளன. அணுமின் உலைகளை அதிகமாக வைத்திருக்கும் நாடு அமெரிக்கா ஜப்பானில் 53 அணுமின் உலைகள் உள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

ஜப்பானில் மார்ச 11ஆம்திகதி 8.9றிச்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராட்சதச் சுனாமிஅலைகள் ஜப்பானைத் தாக்கியது. இதனால் ஜப்பானில் வடக்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புகுசிமா டாக்கி அணுமின் நிலையத்தில் உள்ள ஆறு அணுமின் உலை களில் நான்கு அணுமின் உலைகள் வெடித்து அணுக்திர் வீச்சு வெளியாகியது. இதனால் ஜப்பான் மட்டுமல்ல ஆசியா மற்றும் பசுபிக் பிராந் தியங்களும் அணுமின் தாக்கத்திற்கு உள்ளாகியது. ஜப்பானின் நில நடுக்கப் பாதிப்புப் பற்றி சர்வ தேச அணுசக்தி நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்ததாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜப்பான் கடந்த 65ஆண்டுகளில் சந்தித்திராத பேரழிவை சந்தித்தது. இரண்டாம் உலகப்போரின் போதே ஜப்பான் மிகப்பெரிய பாதிப்பைச் சந்தித்தது. கிரோசிமா, நாகஷாகி போன்ற நகரங்களில் அமெரிக்கா போட்ட அணுகுண்டுகளின் தாக்கங்கள் இன்னமும் உணரப்படும் நிலையில் இன்னொரு பேரவலம் நடந்திருக்கின்றது. பூகம்பம், சுனாமி, அணுஉலைகளின் வெடிப்பு என ஜப்பானில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் முழு உலகமே ஆடிப்போய் உள்ளது. பிரான்ஸ் தனது அணுமின் உலைகள் மூலமாக 85 வீதமான மின்சாரம் உற்பத்தியாகிறது. மிக அதிகமான அணுமின் உலைகளை கொண்ட நாடுகளில் ஜப்பான் மூன்றாவது இடத்தில் உள்ளது.



தொகுப்பு:சுபா

தற்போது அணுமின் உலைகளைக் கொண்ட நாடுகள் அவற்றைப் பாதுகாப்புடன் வைத்திருக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. ஏனெனில் அண்மையில் ஜப்பான் அணுஉலை வெடித்தலால் பாரிய பூகம்பம் ஏற்பட்டது. இந்த பூகம்பம் காரணமாக இருபதாயிரத் திற்கும் அதிகமானவர்கள் மரணித்தனர். இந்த அணுஉலை வெடிப்பினால் மனிதர்கள் விலங்குகள் உற்பட தாவரங்கள் கூட சுவாசிக்கப்படாத நிலையில் பாதிக்கப்படுவதுடன் மரணங்கள் சம்பவிக்கும் ஆபத்து உள்ளது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவே அணுமின் நிலையங்களை ஜேர்மனியில் இல்லாமல் செய்வதற்கான எதிர்ப்பு இயக்கம் செயற்பட்டு வருகின்றது. அது மக்கள் மத்தியில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு விழிப்புணர்வு போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றது. ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட நிகழ்வை தொடர்ந்து ஜேர்மனியில் பல பாகங்களிலும் மக்கள் தமது எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர். கடந்த நூற்றாண்டில் பல்வேறு இடங்களில் அணுமின் உலைகள் வெடித்து பல லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளார்கள். இம்முறை ஜப்பான்நாட்டு அணுமின் உலைகளின் வெடிப்பானது மேலும் மோசமானதால் விளைவுகள் மிகவும் பாரதூரமானது. இந்த நூற்றாண்டில் 10 வருடங்களுக்குள் உலகத்தில் பலபாகங்களிலும் இயற்கை அனர்த்தங்களையும் அழிவுகளையும் சந்தித்து விட்டோம். 2004ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட பூகம்பம் 9றிச்டர் அளவில் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து இராட்சத சுனாமி அலைகள் இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளைத் தாக்கியது. அதில் 2 லட்சத்திற்கு மேற்பட்டோர் பலியானார்கள். அதனைத் தொடர்ந்து 2010ல் ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்து 3 லட்சம் பேர் வரை பலியானார்கள். 2011இல் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் ஏற்பட்ட நீண்ட கடும்குளிரும், பனியும், பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத பாதக நிலையை உருவாக்கியது. அண்மையில் அவுஸ்ரேலியா, பிரேசில் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பெய்த கடும் மழையினால் பல லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அடுத்த வேளை உணவிற்காக கையேந்தும் நிலை ஏற்பட்டது. இறுதியாக ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் முழு ஜப்பானிய மக்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. உலகத்தில் ஒருபுறம் யுத்தங்களும் வறுமையும் கோர தாண்டவம் ஆட மறுபுறமோ இயற்கையின் சீற்றங்கள் மனிதகுலத்தை அழித்துக் கொண்டிருத்திறது. இவ்வகையான அனர்த்தங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில்பரந்த அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்

# அவதாரமாக உருவாகிய அவதார்



2009ம்ஆண்டு "ஜேம்ஸ்கேமரூன்" இயக்கத்தில் வெளிவந்த ஆங்கிலத்திரைப்படம் தான் அவதார். சுமார் 1500 கோடி ரூபாய் செலவில் தயாரான இத்திரைப்படம் டைட்டானிக் திரைப்படத்தின் சாதனையை முறியடித்தது.

இத்திரைப்படத்தின் மூலம் 'அவதார்' என்ற இந்திய வார்த்தை உலகெங்கும் தெரிந்த வார்த்தையாக மாறியது. இதில் வித்தியாசமான விலங்குகள்,மரங்கள், போன்ற தோற்றங்களை உருவாக்கி அவற்றைத்தான் முப்பரிமாணத்தில் அவதாரமெடுக்கவைத் துள்ளனா "ஜேம்ஸ்கேமரூன்"குழுவினர். இவர் கனடாவைச் சேர்ந்த ஒரு புகழ் பெற்ற ஆங்கிலத்திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர், திரைக்கதை எழுத்தாளர் மற்றும் கண்டுபிடிப்பாளர். இவர் டெர்மினேட்டர், ஏலியன்ஸ், டைட்டானிக், அவதார் உள்ளிட்ட புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்படங்களைப் படைத்த பெருமைக் குரியவர். இவரால் படைக்கப்பட்ட அவதார் திரைப்படத்திற்கு "ஜேம்ஸ் றோர்ன்னர்" இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவினை "மாரோபியார்" என்பரும் படத் தொகுப்பினை "ஜேம்ஸ்கமரூன", "ஜான்ரேபுவா" மற்றும் "ஸ்டீபன்ரிங்கின்" போன்றோர் மேற்கொண்டுள்ளனர்.

இத் திரைப்படம் 162 நிமிடங்களை கொண்டதுடன் டிசம்பர் மாதம் 10ம் திகதி 2009ம் ஆண்டு லண்டனிலும் டிசம்பர் 18 ஆம் திகதி 2009ம் ஆண்டு ஐக்கிய அமரிக்காவிலும் வெளியிடப்பட்டது. இதன் ஆக்கச் செலவு 237 மில்லியன் அமரிக்கடொலர் என்பதுடன் இத்திரைப்படம் ஈட்டிக்கொடுத்த வருவாய் 2, 780, 969, 137 அமெரிக்க டொலர்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

துவா.என்

## தாதியர் தினம் அனுஷ்டிப்பு

நோயாளரைப் பரிசோதிப்பதுடன் வைத்தியரின் பணி முடிந்து விடுகிறது.ஆனால் அவர்களை ஆரம்பம் முதல் இறுதிவரை முறையாகப் பராமரித்து உடல், உளரீதியாக, அவர்களை மேம்படுத்தும் உயரிய பணியை தாதியர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு யாழ்- தாதியர் பயிற்சிக் கல்லூரி வருகை விரிவுரையாளர் டாக்கர் மலர்பிள்ளை தெரிவித்தார். மாணவன் அ.ற.அ.ஷபானிடம் இது குறித்து கேட்டபோது இன, மத, மொழி தேசங்களைக்கடந்து ஒரேயொரு குறிக்கோளை மட்டும் மையமாகக்கொண்டு செயற்படுபவர்களே தாதியர்கள் சுகாதாரத்துறையில் தாதியரின் பங்கு இன்றைய நிலையில் அளப்பரிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஒரு நோயாளிகள் அந்நோய் நிலையிலிருந்து குணமடைய வைத்தியருடன் இணைந்து செயற்படும் தாதியர்கள் அந்நோயாளியின் சுயதேவைகளுக்கு உதவுவது மட்டுமின்றி மருந்துகள் வழங்குவது முதல் அவரது உளநிலையை அறிந்து ஆறுதல் வழங்கி உறவினர்களையும் நோய்நிலை தொடர்பாக தெளிவுபடுத்தி நிம்மதிப்படுகினறனர். நோயாளியானவர் எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஒரு சமூக அந்தஸ்துடைய தனி மனிதராகவே தாதியர்களால் கருதப்படுகின்றனர். எவ்வாறான நெருக்கடியான நிலைகளிலும் நோயாளியின் உடல்நிலைகுறித்து அதீத கவனத்துடன் தாதியர்கள் செயற்படுகின்றனர்.என்று தெரிவித்தார்.

(ஜெகன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க-பொ-த- சாதாரண தரத்தில் தமிழ்ப்பாட சித்தி வீதம் வீழ்ச்சி



மாணவர்களின் வாழ்க்கை பயணத்தில் திருப்புமுனைக்கட்டமாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை அமைகின்றது. இதில் சித்தி அடைவதன் மூலமே எதிர்காலத்தை சிறப்பான முறையில்அமைத்துக் கொள்ளலாம். மாணவர்கள் பலர் இதில் சித்தியடையத் தவறுகின்ற நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் க.பொ.த. சாதாரணதரத்தில் கணித பாடம் மட்டுமே சித்தியடைவதற்கு பிரச்சனைக்குரிய பாடமாக பலருக்கு இருந்தது. தாய்மொழியை தமிழாகக் கொண்டிருக்கும் யாழ்பாணத்தில் அனேக மாணவர்கள் தமிழ்ப் பாடங்களில் "C" தரச் சித்திக்கு மேற்படவே பெற்று வந்தனர்.ஆனால் அண்மை க்காலமாக இந்நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. கடந்த இரண்டு வருடங்களாக தமிழ் பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டம் வீழ்ச்சி கண்டு வருகின்றது. அதிலும் இறுதியாய் நடந்த பரீட்சையில் தமிழ் பாடத்தில் மாணவர்களின் சித்திவீதம் மிகவும் மோசமான நிலையைஅடைந்துள் ளதையும் தமிழில் "A" தரத்தை பெற்ற மாணவர்களின் எண் ணிக்கை குறைவடைந்து "S" தரச் சித்தியை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இன்று அதிகமாக காணப் படுகின்றன. இதனால் மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதில் பல நெருக்கடிகளை சந்திக்கின்றனர். தமிழ் பாடத்தில் "S" தரச் சித்தியைப் பெற்றதனால் தமிழ் பாடத்தை எடுத்துக் கொடுத்து படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 2010ம் ஆண்டு பாடசாலைகளில் தமிழ்பாட சித்தி வீதத்தை எடுத்துக் கொண்டால்

யா/புற்றளை மகா வித்தியாலயத்தில்
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் - 30
A தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 03
B தரச்சித்தி பெற்ற மாணவர்கள - 03
C தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 05
S தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 11
W பெற்ற மாணவர்கள் - 08

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் - 30
A தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 01
B தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 04
C தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 07
S தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 09
W பெற்ற மாணவர்கள் - 09

யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில்
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் - 84
A தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 14
B தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 13
C தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 30
S தரச்சித்தி பெற்ற மாணவர்கள் - 21
W பெற்ற மாணவர்கள் - 06

இன்று A தரச் சித்தி பெறும் மாணவர்கள் அருகி S தரச் சித்தி பெறும் மாணவர்களும் சித்தியடையாத மாணவர் களுமே அதிகமாக காணப்படுகின்றனர். இதற்கு காரணம் மாணவர்களா? ஆசிரியர்களா? அல்லது புதிய வினாத்தாளின் வினாக் கட்டமைப்பு முறையா? வினாத்தாள் திருத்தப்படும் முறையா? ஏன பல கேள்விகள் எழுகின்றன. தமிழ்ப்பாட வீழ்ச்சிக்கு காரணம் மாணவர்களுக்கு வாசிப்பு பழக்கம் இல்லை என்பதுடன் அவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களையே படிக்கின்றனர். மாணவர்கள் தேடிக்கற்பதில்லை என யா/புற்றளை மகா வித்தியாலய தமிழ்ப்பாட ஆசிரியர் திருமதி பிருந்தா சதீஸ்குமார் கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில் மாணவர்கள் வீட்டுச்சூழல் காரணமாகவும் படிப்பதில்லை. இம் மாணவர்களுக்கு தனியான கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் கூறினார்.

ஆங்கிலம் உட்பட வேறு சில கடினமான பாடங்களில் உயர் சித்தி பெறும் மாணவர்கள் தமிழ்ப்பாடத்தில் உயர்சித்தி பெறத் தவறுகின்ற நிலை காணப்படுகின்றதே என வினாவிய போது தமிழ்ப் பாடப்பரப்பு அதிகமாக இருப்பதனால் தமிழ்ப்பாடத்தில் உயர் சித்தி பெற மாணவர்கள் தவறுகின்றனர் என திருமதி. பிருந்தா சதீஸ்குமார் கூறினார்.

தமிழ் ஆசிரியர் திரு.நந்தகுமார் குறிப்பிடுகையில் 5E என்ற புதிய கல்வித்திட்டமுறை அறிமுகப்படுத்தப்பட்டு புதிய வினாத்தாள் அமைப்பு என்ற வகையில் கடந்த இரு வருட க.பொ.த சாதாரணப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அதற்கு முந்திய காலங்களோடு முடிகின்றது. இன்றைய மாணவரிடம் ஒரு விடயத்தை நீண்டு தொகுத்துச் சொல்லும் ஆற்றல் குறைந்து எதனையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலே காணப்படுகின்றது ஆசிரியர்களிடம் இருந்தும் மாணவர்கள் இதனையே எதிர்பார்க்கின்றனர். இதுவும் அவர்களது மொழி ஆட்சி, மொழித்திறன் ஆற்றல் குறையக் காரணமாகின்றது அத்துடன் பல மாணவர்களிடம் எழுத்துப்பிழை, எழுத்தை உறுப்பின்றி எழுதுதல் போன்ற விடயங்களையும் அவதானிக்க முடிகின்றது. பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியர்களும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் திருத்தாது விட்ட இத்தகைய தவறுகளையும் அதற்கான குற்றத்தினையும் கூட தமிழ்ப்பாட ஆசிரியர்களே சுமக்க வேண்டியுள்ளது என திரு.நந்தகுமார் குறிப்பிட்டார். அதிகமான நூல்களை வாசிக்க செய்வதன் ஊடாகவும் சில விசேட செயற்திட்டங்களினூடாகவும் இப் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளலாம். பெற்றோரின் போதிய கவனிப்பின்மை, புலமைப்பரிசில் பரீட்சையை மட்டும் மையப்படுத்திய திணிப்புக்கள் போதியளவான வாய்ப்புக்கள் வழங்கப்படாமை போன்றனவும் கூட இந் நிலைக்கு காரணமாக அமையலாம். இன்றைய மாணவர்கள் அதிகநேரத்தை கணினியுடனேயே செலவிடு கின்றனர் அதிலும் குறிப்பாக கணினியில் விளையாடு வதற்கே செலவிடுகின்றனர். இதுவும் அவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு தடையாக இருக்கின்றது. மாணவர்களிடம் இன்று மொழியாற்றல், பேச்சாற்றல், போன்றனவும் குறைவடைந்து வருகின்றன. இதற்கு அவர்கள் நிறைய நூல்கள் படித்தல் அவசிய மானது. அத்துடன் அவர்கள் கட்டுரைகள் கவிதைகள் போன்றவற்றை எழுதி தமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் இருந்த வினாத்தாள் அமைப்பிற்கும் இப்போது இருக்கும் வினாத்தாள் அமைப்பிற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. குறிப்பாக பகுதி2 பகுதி 3ல் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள குறுவினா அமைப்புக்கள் மாணவர்களை அதிகமான புள்ளிகளை இழப்பதற்கான வாய்ப்பாக அமைகின்றன. இலக்கணப் பகுதிகள் இப்பொழுது அதிகமாக காணப்படுவதாலும் மாணவர்களின் புள்ளி இழப்பு அதிகமாகக் காணப்படுகின்றது என தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் தமிழ்ப்பாட ஆசிரியர் தெரிவித்தார். வினாக்களை விளங்கி அதற்கேற்ப சிந்தித்து விடைகளை எழுத மாணவர்கள் பழக வேண்டும் மாணவர்கள் தங்களை முயற்சி பயிற்சி ரீதியாக தயார்ப்படுத்திக் கொள்வதும் தமிழாசிரியர் எதிர்காலத்தில் தமிழ்ப்பாடசித்தி வீதத்தை அதிகரிப்பதற்காக தம்மாலான செயற்பாடுகளை மேற்கொள்வதாலும் தமிழ் பாடத்தில் சித்தி வீதத்தை அதிகரித்துக் கொள்ளலாம். தமிழ்தானே என்று அலட்சியம் செய்யாது தமிழை அதிக கவனத்துடன் கற்க வேண்டும்.யாழ்ப்பாணம் பண்பாட்டு சின்னங்களை இழந்து வருகின்ற நிலையில் தமிழ் மொழி அடையாளத்தை அழியவிடாமல் காப்பது இளம் மாணவர்களின் கடமையாகும்.

சுகனியா
மிருஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org